1979 பிப்ரவரி 19]

வெள்ளாற்றுப் பாலம்.

*வினா எண் 96:—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் வட்டத்தில் உள்ள சேத்தியாதோப்பு வெள்ளாற்றின் பாலத்தை சீர்திருத்தம் செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

இல்லை.

திரு. துரை கலியமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் வட்டத்தில், சேத்தியாதோப்பில் கட்டப்பட்ட இந்த பாலமானது ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு மேலாகிறது. இது போக்குவரத்து வசதிக்காக மட்டும் கட்டப்பட்டது அல்ல. வெள்ளாற்றில் தண்ணீர் அதிகம் வரும்போது அத்தண்ணீரைத் தேக்குவதற்காகவும் கட்டப்பட்டது. வெள்ளக் காலத்திலே பஸ்களும், பேருந்துகளும், இதர வண்டிகளும் செல்லும்போது அது அபாயகரமான நிலையில் உள்ளது. அது முக்கியமாக நெய்வேலி, பண்ருட்டி வழியாக கும்பகோணம், தஞ்சை போன்ற ஊர்களை இணைக்கின்றது. ஆகவே, இதை உடனடியாக விரிவு படுத்தி, நல்ல நிலையில் அமைக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் 1855 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். இது வெள்ளாற்றின் குறுக்கே அமைந்திருக்கிறது. சேத்தியாதோப்பு அணைக்கட்டிலே 17 கண்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கண்ணின் அகலமும் 30 அடி. இந்தப் பாலத்தின் அகலம் $13\frac{1}{2}$ அடி. இது சாலைப் போக்குவரத்துக்கு முக்கியமான இடமாக இருக்கின்றது என்று அரசுக்கு மனுக்கள் வந்திருக்கின்றன. எனவே, சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்த அரசு இந்தத் திட்டத்தைச் சேர்த்து, இப்போது ஆய்வில் இருந்து வருகிறது. இது 41 லட்சருபாய் செலவில் செப்பனிடப்பட இருக்கின்றது, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் தஞ்சை மாவட்டத்தின் பெரும் பகுதி மக்கள் சென்னை செல்வதற்கு உரிய பாலமாக அமைந்திருக்கின்றது. எனவே, இந்தப் பாலத்தைஅகலப்படுத்த முடியவில்லை என்றால், அதற்கு அருகில் ஒரு பெரிய பாலத்தை அமைத்து, சென்னை,

தஞ்சை மாவட்டத்தை இணைக்கக்கூடிய வகையில் ஒரு திட்டத்தை உடனடியாகச் செய்வதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : மூலக் கேள்விக்கு நேரடியாக தொடர்பு இல்லாவிட்டாலும் சிதம்பரத்திற்கு அருகில் வெள்ளாற்றின் குறுக்கே சிதம்பரம் முட்டலூர், புவனகிரி முட்டலூர் இரு பகுதிகளையும் இணைக்கின்ற பாலம் பல்லாண்டுக்கு முன்பே இடிந்து விட்டது. அந்தப் பாலத்தை மறுபடியும் கட்டி அதை இணைக்கவேண்டுமென்ற கோரிக்கை பல்லாண்டு காலமாக அப்பகுதி மக்களால் வைக்கப்பட்டு வருகிறது. அந்தப் பாலம் கிழக்குக் கடற்கரைச் சாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாக முன்பு சொல்லப்பட்டது. அந்தப் பாலத்தை வெள்ளாற்றின் குறுக்கே அமைக்க அரசு தற்போது என்ன நடவடிக்கையை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அரிய யோசனையை ஏற்கனவே இருந்த அரசு காலத்தில் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இதையெல்லாம் பற்றி அரசு பரிசிலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : ஏற்கனவே இருந்த அரசிடம் சொல்லியிருந்தால் என்று அமைச்சர் அவர்கள் சொல்வது எப்படி சரியாகும்? அருள்கூர்ந்து உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே ஒரு கேள்விக்கு அமைச்சர் இவ்வாறு பதில் சொன்னபோது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டி அது நீக்கப்பட்டது. இப்போது மறுபடியும் அந்த முறையில் பதில் சொல்லுகிறார்கள். இந்த அரசு செய்யுமா செய்யாதா என்று பதில் சொல்லுவதுதான் முறையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னாலே சொன்னது 'செய்யவில்லை' என்று நேரடியாகச் சொன்ன குற்றச்சாட்டு. இப்போது முன்னாலேயே சொல்லியிருக்கலாமே என்ற ஒரு யோசனையாகத்தான் சொன்னார்களே தவிர குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அதைத் தவறாக எடுத்துக் கொள்வது நியாயமில்லை.

திரு. துரை முத்துசாமி : வெள்ளாற்றின் குறுக்கே உள்ள அந்தப் பாலத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று பலரும் கேட்டார்கள். அங்கு ஒரு பாலம் 41 லட்சம் ரூபாய் செலவில் கட்டும் நிலைமை இருக்கிறதா? அமைச்சர் அவர்களே அந்த

வழியாகச் சென்றிருக்கக் கூடும். ஒரு வண்டி போனால் மறு வண்டி போக முடியாது. நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருக்கும். ஆகவே, உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தக் கேள்வியைத் தனிக் கேள்வியாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதிக் கேட்டால் அவர்கள் காலத்தை நிர்ணயித்து பதில் சொல்லுவார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது இந்தப் பாலம் 1855 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி துவங்குவதற்கு முன்னாலே கட்டப்பட்டதாகச் சொன்னார்கள். தமிழகத்தில் அந்தமாதிரி பல பாலங்கள் இருக்கின்றன. நீடாமங்கலத்தில் அப்படிப்பட்ட ஒரு பாலம் பாமினி ஆற்றின் குறுக்கே உள்ளது இடிந்து கிடக்கிறது. இப்படி பல இடங்களில் இருக்கின்றன. நீண்ட காலத்திற்கு முன்னாலே கட்டப்பட்ட இப்படிப்பட்ட பாலங்களை எல்லாம் ஆராய்ந்து அனைத்தையும் புதுப்பிக்க அரசு தீவிர சிறப்புத் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் மூலக் கேள்விக்கான பதிலிலேயே விளக்கமாகப் பதில் சொல்லியிருக்கிறேன். வெள்ளாற்றின் குறுக்கே அமைந்துள்ள சேத்தியாத்தோப்பு அணைக்கட்டுப் பாலத்தைப் பற்றிச் சொன்னார்கள். இது நீர்ப்பாசனத்திற்காக ஏற்படுத்தப்பட்ட பாலம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்வி சாலை அபிவிருத்தித் துறையிடம் கேட்க வேண்டிய கேள்வி என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை.

*வினா எண். 97—திரு. கு. வடிவேல் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தாலூகாவில் உள்ள நொய்யல் ஆற்றின் குறுக்கே அணை கட்டும் உத்தேசம் ஏதாவது அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

(இ) இத்திட்டத்தின்கீழ் எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.